# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure) In the Court of**
**III Additional District & Sessions Judge(PCR),**
**III Additional District & Sessions Court (PCR), Madurai.**

| | | |
|---|---|---|
| **Special Sessions Case No.** | : | 53/2018 |
| **Deposition of witness for** | : | **PW. 5 (LW. 3 )** |
| **Name** | : | குருவம்மாள் |
| **Father's / Husband's Name** | : | முத்தையா |
| **Village / Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.08.2026.**

**(5, 12 வது எதிரிகள் இறந்துவிட்டனர். 4,9,11,எதிரிகள் ஆஜரில்லை. 4,9,11,வது எதிரி சார்பில் பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனுத்தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. 1 முதல் 3, 6 முதல் 8, 10 எதிரிகள் ஆஜர் )**

**விசாரணை தொடங்கிய நேரம் 03.25 p.m**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் வடபழஞ்சியில் குடியிருக்கிறேன். வீட்டு வேலை செய்கிறேன். புகார்தாரர் அருள்மொழியை தெரியும்., அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். அவரது கணவர் முத்தழகுவையும் தெரியும். எதிரிகளையும தெரியும். இறந்து போன முத்தழகு தாழ்த்தப்பட்ட இந்து பறையர் பட்டியல் இனத்தை சேர்ந்தவர். எதிரிகள் கள்ளர் இனத்தை சேர்ந்தவர்கள். சுமார் 8

ஆண்டுகளுககு முன்னர் இரவு சுமார் 9 மணியளவில் நான் எனது வீட்டிற்குள் இருந்தபோது எனது வீட்டிற்கு பின்புறம் இருந்து சத்தம் கேட்டது. அதனால் நான் பின்னால் சென்று பார்த்தபோது எதிரி சுந்தரபாண்டி அரிவாளை வைத்துக்கொண்டு முத்தழகுவை பார்த்து PCR கேஸ் கொடுத்து எங்களை உள்ளே தள்ளிய பறப்பயலே என்று சொல்லிக்கொண்டு சுந்தரபாண்டி அரிவாளால் வெட்டினார். அவருடன் இருந்த எதிரி பிரபுவும், சுரேஷ்ம் முத்தழகுவை கத்தியால் குத்தினார்கள். அந்த இடத்திற்கு அருகில் இருந்த பள்ளத்தில் இருந்து நிறைய பேர் அவனை வெட்டுங்கடா குத்துங்கடா என்று கூறிய சத்தம் கேட்டது. அவ்வாறு சொன்னவர்கள் யார் என்பதை நான் பார்க்கவில்லை. நான் அச்சம்பவத்தை பார்த்து பயந்து வீட்டிற்குள் சென்றுவிட்டேன். மேற்படி எதிரிகள் வெட்டவந்ததை பார்த்து முத்தழகுவின் தம்பி அலறி அடித்து ஓடிவிட்டார் .வேறு யாரும் சம்பவ இடத்தில் இல்லை. கொலை செய்யப்பட்ட முத்தழகு விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்தவர். அவர் பொதுப்பிரச்சனைகளுக்கு செல்வார். இது தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1,6,7 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:

முத்தழகு எனது பங்காளி என்றால் சரியல்ல. எனது தூரத்து உறவினர். போலீசார் என்னை விசாரித்தபோது சிலர் இருட்டில் மறைந்திருந்தார்கள் என கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். எனது வீட்டின் முன்வாசல் வடக்கு பக்கமாக உள்ளது. நான் அன்றைய தினம் வீட்டிற்குள் இருந்து வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். நான் பிற வீடுகளில் சம்பளத்திற்கு வேலை செய்தேன். அந்த வீடுகள் பல்கலைக்கழகம் அருகில் உள்ளது. நாகமலைபுதுக்கோட்டையில்தான் பல்கலைக்கழகம் உள்ளது என்றால்

சரியல்ல. வடபழஞ்சியில் உள்ளது. அந்த பல்கலைக்கழகத்தில் பணிபுரிபவர்களின் குடியிருப்பில்தான் நான் வேலை செய்தேன். நான் காலையில் வேலைக்கு சென்றுவிட்டு மதியம் வேலையை முடித்து வீட்டிற்கு வந்துவிடுவேன். சம்பவ சமயத்தில் நான் மட்டும்தான் வீட்டில் இருந்தேன். எனது கணவர் இல்லை. சம்பவ தினத்தன்று என்னை எனதுவீட்டிற்கு வந்து போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவர்களிடம் சம்பவம் பற்றிய விபரங்களை கூறினேன். அதனை போலீசார் பதிவு செய்தார்கள். அதில் நான் கையெழுத்திட்டேனா என்றால் கையெழுத்திட்டேன். நான் அன்றைய தினம் மதியம் 02.00 மணிக்கு வேலையை முடித்து வீட்டிற்கு வந்தேன். சுந்தரபாண்டியின் பெயரை எனக்கு யார் சொல்லிக்கொடுத்தது என்றால் யாரும்சொல்லிக்கொடுக்கவில்லை. எனக்கு ஏற்கனவே அவரது பெயர் தெரியும். வடபழஞ்சி என்பது ஒரு பெரிய ஊர் என்றால் சரிதான். நான் குடியிருக்கும் பகுதி காலனி பகுதி என்றால் சரிதான். வடபழஞ்சி 3வது தெருவில் உள்ளவர்கள் யாரையாவது எனக்கு தெரியுமா என்றால் பலரை தெரியும். அவர்கள் பெயர் என்ன என்றால் ஆனந்த், மினிக்கி என்பவர்கள் அவர்களில் சிலர். சம்பவத்திற்கு முன்னர் நான் எப்போது எதிரி சுந்தரபாண்டியை பார்த்தேன் என்றால் சம்பவத்தன்று மதியம் கூட பார்த்தேன். எங்கு வைத்து பார்த்தேன் என்றால் மெயின் ரோட்டில் வைத்து பார்த்தேன். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் சுமார் 3 மணி இருக்கும். அப்போது அவரிடம் நான் பேசினேனா என்றால் இல்லை. அப்போது மெயின் ரோட்டில் இருந்து ஊருக்குள் பைக்கில் அவர் சென்று கொண்டிருந்தார். எனது இனத்தை சேர்ந்த சாட்சி சேகர்தான் சுந்தரபாண்டியின் பெயரை எனக்கு சொல்லித்தந்தவர் என்றால் சரியல்ல.

சேகர் எனது உறவினர் என்றால் சரியல்ல. அவர் எனது காலனியில்தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். அவர் எனது மாமா மச்சினன் உறவினர் என்றால் தூரத்தில் அவ்வாறு மாமா உறவு உள்ளவர். நான் காவல்நிலையத்திற்கு இவ்வழக்கு தொடர்பாக எத்தனை முறை சென்றேன் என்றால் ஒரு முறை கூட செல்லவில்லை. முத்தழகுவின் அப்பா பெயர் முத்தையா. முத்தையாவின் மூத்தமனைவியின் மகன்தான் முத்தழகு என்றால் சரிதான். முத்தையாவிற்கு இளைய மனைவியின் மூலம் முத்தையா என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். போலீசார் என்னிடம் எதிரிகளை காட்டி அடையாளம் சொல்லச்சொன்னார்களா என்றால் இல்லை. போலீசார் என்னை முதலில் விசாரிக்கும்போதே சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றுதான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் வேலை பார்க்கும் வீடுகளில் சமையல்வேலை உட்பட எல்லா வேலையும் செய்வேன் என்றால் சரிதான். நான் வேலை முடித்து இரவு 9 மணிக்கு பிறகுதான் வீட்டிற்குவருவேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் நான் வீட்டில் இருந்ததாக சொல்வதும்,அலறல் சத்தம கேட்டு சென்று சம்பவத்தை பார்த்ததாக சொல்வதும் உண்மைக்கு புறம்பானது என்றால் சரியல்ல. சுந்தரபாண்டியை எனக்கு முன்பின் தெரியாது என்றும், அவர் சம்பவ இடத்திற்கு வந்ததாகவும், முத்தழகுவை அரிவாளால் வெட்டியதாகவும் சொல்வது உண்மைக்கு புறம்பானது என்றும் சொன்னால் சரியல்ல. முத்தழகு விடுதலை கட்சியின் பொறுப்பில் இருந்தார் என்றால் சரிதான். முத்தழகுவிற்கு அக்கட்சிக்குள்ளும், கட்டப்பஞ்சாயத்தில் ஈடுபடுவதால் பிற இடங்களிலும் பல விரோதிகள் உண்டு என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>2,3,9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனது வீட்டில் இருந்து வடபழஞ்சி மெயின் ரோட்டிற்கு 10 நிமிடத்தில் நடந்து சென்றுவிடலாம் என்றால் சரியல்ல. வடபழஞ்சி மெயின்ரோட்டின் இருபக்கங்களிலும் கடைகள் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும் சாட்சி ஒய்யம்மாளின் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் உள்ளது என்றால் சுமார் 5 நிமிடத்தில் நடந்து செல்லும் தூரம் இருக்கும். எனது வீட்டில் இருந்து பார்த்தால் ஒய்யம்மாளின் வீடு தெரியுமா என்றால் தெரியாது. எனது வீடடில் இருநது பார்த்தால் சாட்சி அக்கினியின் வீடு தெரியும். என் வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் வடபழஞ்சிமெ்யின் ரோட்டின் வழியாகத்தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். அந்த ரோடு எனது வீட்டின் வடக்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். இறந்துபோன முத்தழகுவின் வீட்டிற்கு எனது வீட்டில் இருந்து சுமார் 3 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். நான் முத்தழகுவின் வீட்டின் உள்ளவர்களுடன நல்ல முறையல் பேசிக்கொள்வேன் என்றால் சரிதான்.முத்தழகு வெட்டுப்பட்டு சுமார் அரை மணி நேரத்தில் நாகமலை புதுக்கோட்டை போலீசார் சம்பவம் இடம் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் அவர்கள் என்ன நடந்தது என்பதை விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன விபரத்தை கேட்டு எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். முத்தழகுவின் பிரேதத்தை உடனடியாக சுமார் அரை மணி நேரத்தில் ஆம்புலன்சில் அங்கிருந்து எடுத்துசென்றுவிட்டார்கள் என்றால் சரிதான். நான் எனது வீடடிற்கு பின்பக்கம் வரவேண்டும் என்றால் முன்பக்கம் வந்துதான் வரமுடியும் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு பின்புறம் தார் ரோட்டிற்கு பக்கத்தில் முத்தழகு வெட்டப்பட்ட பின்னர் பிரேதம் கிடந்தது. நான்

முத்தழகுவின் மனைவியிடமும் தம்பியிடமும் சம்பவம் பற்றி கூறினேனா எனறால் இல்லை. நான் கத்திய சத்தத்தை கேட்டு அவர்களே வந்துவிட்டார்கள். வந்தவர்களிடம் நான் சம்பவத்தை பார்த்தது பற்றி கூறினேனா என்றால் இல்லை எனக்கு ஒருமாதிரி ஆகிவிட்டதால் கூறவில்லை. சம்பவ தினத்தன்று விசாரித்தபிறகு போலீசார் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 2 முறை அதன்பிறகும் விசாரித்தார்கள். பிரபும், சுரேஷ்ம் முத்தழகுவை கத்தியால் எந்த இடத்தில் குத்தினார்கள் என்று கூறினேனா என்றால் இல்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சத்தம்கேட்டு எனதுவீட்டிற்கு பின்புறம் வந்து சம்பவத்தை பார்த்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. முத்தழகு இறந்து 2 நாட்களுக்கு பிறகு வழக்கை வலுப்படுத்த என்னை இவ்வழக்கில் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 2,3 எதிரிகளுக்கும் முத்தழகுவின் இறப்பிற்கும் எந்த சம்பந்தமுமு இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/–
அமர்வு நீதிபதி,
மூன்றாவது கூடுதல் நீதிமன்றம்(பி.சி.ஆர்)
மதுரை.